*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – IV Issue – 2
May -2020

# பெண்கள் முன்னேற்றத்தில் தமிழ்க் கவிஞர்களின் பங்களிப்பு - ஓர் பார்வை

உமாதேவி.க,
இந்தி மொழிப் பேராசிரியை, இந்தித்துறை,
வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,
விருதுநகர்.

**Corresponding Author**: umabharathiramesh@gmail.com

## ஆய்வு நோக்கம்

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று முழங்கினார் கவிமணி தேசிக விநாயகம் அவர்கள். அத்தகைய பெண்களின் முன்னேற்றத்தைத் தடை செய்யும் முட்டுக்கட்டைகளை முழுமையாக அகற்றியாக வேண்டும். தன்னுடைய நெறிகளைத் தானே வகுத்துக் கொண்டு, பிறருடைய நலனிலும் அக்கறை கொண்டு செயலாற்றும் அற்புதப்பிறவி பெண் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும் என வீரமுழக்கமிட்டவர்கள் தமிழ்க்கவிஞர்கள் ஆவர். நம் பாரத நாட்டில் தோன்றிய மகாகவி பாரதியார், பாரதிதாசனார், கவியரசர் கண்ணதாசனார் மற்றும் எழுச்சிக்கவிஞர் புலமைப்பித்தன் போன்ற புரட்சிக்கவிஞர்கள் நம்முடைய தமிழ்இலக்கியத்திற்கு மட்டுமின்றிப் பெண்கள் முன்னேற்றம், பெண் விடுதலை மற்றும் பெண்கல்வியின் அவசியம் குறித்தும் தம்முடைய எழுச்சிப்பாடல்கள் மற்றும் கவிதைகள் மூலமாகவும் அளப்பரிய சேவை ஆற்றியுள்ளனர் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்புரட்சிக்கவிஞர்கள் நம்முடைய தாய்மொழியான தமிழ்மொழியில் பெண்கள் முன்னேற்றம் குறித்த தம் படைப்புகளைக் கவிதை வடிவில் வழங்கியுள்ளனர். இப்புரட்சிக்கவிஞர்கள் தம் பேனா முனையைத் தலைகவிழ்த்தி நம் பாரத தேசத்துப் பெண்களின் வாழ்வைத் தலை நிமிரச்செய்தார்கள் என்பதை விளக்கிக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்:** பெண்கள் முன்னேற்றம், மனயைறம், புதுமைப் பெண்கள், பல்துறை வளர்ச்சி

## முன்னுரை

பெண் என்பவள் இந்த மானிடப் பிறவியின் மகத்தான சக்தி. இன்றைய பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பு, செயல்திறன் எனப் பலவற்றிலும் முன்னேறி வருகிறார்கள். இன்று பெண்கள் இல்லாத துறைகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் பெண்கள் மிளிர்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட துறை என்றில்லாமல் பலதரப்பட்ட துறைகளிலும் பெண்கள்

ஆர்வம் காட்டுகின்றார்கள். தாம் தேர்ந்தெடுத்த அத்துறையில் அவர்கள் காட்டும் ஆர்வமும், எடுத்துக் கொள்ளும் முயற்சியும், பயிற்சியும் உலகளவில் அவர்களை மென்மேலும் உயரச் செய்து கொண்டே இருக்கின்றது. பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா என்று வீரமுழக்கமிட்டான் எட்டயபுரத்துக் கவிபாரதி. எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை என்று கூறி, பெண்கள் அடைய வேண்டிய நிலையை உணரச் செய்து, அவர்களின் உயர்வும் முன்னேற்றமும் உறுதியானது என அன்றே விதையிட்டான் அந்தத் தீர்க்கதரிசி. அவ்வண்ணமே இன்றைய பெண்கள் ஒவ்வொரு துறையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள அற்புத சக்தியாக விளங்குகின்றனர். இதனை,

"வாழ்வு பெருக்கும் மதியே சக்தி,
மாநிலங் காக்கும் மதியே சக்தி,
தாழ்வு தடுக்குங் சதிரே சக்தி,
சஞ்சலம் நீக்குந் தவமே சக்தி,
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி,
விண்ணை யளக்கும் விரிவே சக்தி,
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.[1]

என்ற மகாகவி பாரதியின் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

## பெண்கள் முன்னேற்றம்

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்ற வினாவை மாற்றி, அடுப்பங்கரை முதல் ஐக்கிய நாடுகள் சபை வரை பெண்களின் முன்னேற்றம் ஆச்சரியப்பட வைக்கின்றது. தேசியகவியின் கனவை நனவாக்கியவள் இன்றைய புதுமைப்பெண். குழந்தையானாலும் குமரியானாலும் பெண்களின் முன்னேற்றத்தைக் கண்டு வியக்காதவர் இத்தரணியில் எவரும் இல்லை என்று சொல்லும் அளவிற்கு, இமைப்பொழுதும் அயராமல் பணியாற்றித் தன் கனவுகளை மெய்ம்படச் செய்பவள் புதுமைப்பெண். கல்வி, இலக்கியம், அரசியல், விளையாட்டு, விஞ்ஞானம், காவல், ஆன்மிகம், போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் பெண்களின் முன்னேற்றம் இன்று இமயமாக உயர்ந்துள்ளது. பட்டங்களைப் பெறுவதிலும் சட்டங்களை ஆள்வதிலும் பெண்களின் முன்னேற்றம் விரிந்துள்ளது. அத்தகு திறமை வாய்ந்த பெண்களைத் தட்டிக் கொடுத்து ஆலோசனைகள் தந்து முறையாகக் காத்து வந்தால் அவர்களின் முன்னேற்றம் இமயம் தாண்டியும் உயர்ந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை. தற்கால இந்தியாவில் பல உயர்ந்த பதவிகளில் பெண்கள் இருந்து வருகின்றனர். இந்திய அரசில் குடியரசுத் தலைவர், பிரதமர், மக்களவைத் தலைவர், மாநிலத்தின் ஆளுநர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளனர். 2011, இந்திய மக்களவையில் மக்களவைத் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும் பெண்களாவர். இதனை,

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.[2]

என்ற எழுச்சி வரிகள் மூலம் மகாகவி பாரதியார் தெளிவுபடுத்துகின்றார்.

**பெண்கள் முன்னேற்றத்தில் மகாகவி பாரதியாரின் பங்களிப்பு**

1904ஆம் ஆண்டில் சுதேசமித்திரன் இதழில் பாரதியார் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி -னார். அப்போது ‘சக்ரவர்த்தினி’ என்னும் பெயரில் வெளியான பெண்களுக்கான மாத இதழில் பாரதியார் 1904 முதல் 1906 வரை ஆசிரியராக இருந்து வந்துள்ளார். இந்தக் காலகட்டத்தில்தான் பாரதியார் பெண் விடுதலைக்காக மிகத் தீவிரமாக எழுதி வந்தார்.

பெண்களின் விடுதலை குறித்தும், பெண் முன்னேற்றம் குறித்தும் அதிகமாகக் கனவு கண்டவர் மகாகவி பாரதி. அந்த எட்டயபுரத்தானின் கவிதை அடிகளில் ஏற்றம் பெற்றது பெண்ணினம். சமுதாயச் சீர்கேட்டில் இருந்தும், மதம் சார்ந்த கட்டுப்பாடுகளில் இருந்தும் பெண்கள் வெளியேறி வரவேண்டும். புது உலகம் காண வேண்டும் என நித்தம் நித்தம் சிந்து பாடினான் பாரதி. புதுமைப் பெண்களாயப் பெண்கள் புது அவதாரம் காண வேண்டும் என்ற அவனுடைய கனவை, நனவாக்கிக் காட்டியவர்கள் இன்றைய பெண்கள். பெண்களைச் சக்தியின் வடிவமாகக் கண்டவர். பெண்ணுரிமைக்காகவும் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் குரல் கொடுத்தவர் மகாகவி பாரதி.

சக்தி தனக்கே உரிமை யாக்கு – அது
சக்தியென்று தாளமிட்டு முழுங்கும் - சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு – அது
சஞ்சலங்கள் யாவினையும் அழிக்கும்.[3]

எனவும் தன் கவிதை வரிகளின் மூலம் சக்தியின் பெருமையைத் தெளிவுபடுத்துகின்றார். பெண் விடுதலை குறித்தும் பாரதியின் அடிகள் பறைசாற்றுகின்றன. இதனை,

விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம் வெல்லுவம் என்றே
.......... .......... ..........
..........
உடையவள் சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒரு நிகர்செய் துரிமை சமைத்தாள்”[4]
எனவும்,

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்
.......... .......... ..........
..........
அறவி முந்நது பண்டை வழக்கம்
.......... .......... .......... ..........
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்விர். நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர்,[5]

என்பதைத் தன்னுடைய கவிதை அடிகளில் புலப்படுத்துகின்றார்.

இன்றைய பெண்கள் ஆண்களுக்கு நிகராக முன்னேற்றம் கண்டு, பெண் விடுதலையானது கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் ‘பெண்கள் விடுதலைக் கும்மி’ என்ற கவிதை வரிகளில் தன் உள்ளத்து மகிழ்ச்சியை வெளிபடுத்துகின்றார். இதனை,

ஏட்டையும் பெண்கள் தொடுவது
தீமையென்றெண்ணி
யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்
போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.[6]
எனவும்
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்

வேண்டிவந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்
தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்.[7]

எனவும் தன்னுடைய கவிதை அடிகளில் தெளிவுபடுத்துகின்றார்.

## பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில் பெண்கள் முன்னேற்றம்

இன்றைய பெண்கள் முன்னேற்றம் காணும் வகையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தன்னுடைய ‘‘குடும்பவிளக்கு’’ வாயிலாகப் பெண்கல்வியின் அவசியத்தைப் பற்றித் தெளிவுறுத்துகின்றார். இதனை,

பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே!
………. ……….
………. ……….
பெண்கட்குக் கல்வி வேண்டும்
கல்வியைப் பேணுதற்கே![8]

என்ற கவிதை அடிகளின் வழியாகப் பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதனைக் காண முடிகின்றது.

பெண்களுக்குக் கல்வியானது மிகவும் அவசியம். தன்னுடைய குடும்பத்தையும் குழந்தைகளையும் நல்ல முறையில் வளர்ப்பதற்கும், இந்த உலகினைக் காப்பதற்கும் பெண்களுக்குக் கல்வி அவசியமான ஒன்றாகும் என்பதை,

கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்! அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைவதில்லை.[9]

என்ற அடிகளின் வாயிலாகப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் பெண்கள் முன்னேற்றம் அடைய கல்வியானது மிகவும் அவசியம் என்று கூறிப் பெண்களின் நிலையை மென்மேலும் உயர்த்துகின்றார். ஒரு பெண் கல்வி பயின்றால் அந்தக் குடும்பமே பல்கலைக்கழகமாக மாறும் எனவும், படித்த பெண்களால் இந்நாட்டையும் தம்வீட்டையும் ஆளும் வல்லமையைப் பெற முடியும் எனவும் தம் கவிதை அடிகளின் வாயிலாக உணர்த்துவதை அறிய முடிகின்றது.

## பெண்கள் போற்றும் மனையறம்

உணவினை உண்டாக்குவது என்பது மக்களின் உயிரினையே உண்டாக்குவதற்குச் சமமாகும். நம் வாழ்வு என்பது நம் பணத்திலோ, வில், வாள் போன்ற படைக் கருவிகளினாலோ கிடைப்பது இல்லை. நல்ல மனையாள் என்பவள், நெருப்பை அடுப்பில் சேர்த்து அன்போடு தன் குடும்பத்தினரின் நலனுக்காக முறையாகச் சமைப்பதையும் அதனை அக்கறையுடன் பரிமாறுவதையுமே தங்களின் முதன்மைப் பணியாக ஏற்றுக் கொண்டார்கள் எனக் கொள்ளலாம். இருப்பினும் சமையல் செய்வதும், வீட்டில் உள்ள மற்ற வேலைகளைச் செய்வது மட்டும் தான் பெண்களுக்கு உரியவை என்று கூறுவது சரியானது அல்ல என்று சாடுகின்றார் பாரதிதாசனார். இதனை,

சமைப்பதும் வீட்டு வேலை
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கேஆம் என்று கூறல்

சரியில்லை! ஆடவர்கள்
நமக்கும்அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம்![10]

என்ற கவிதை அடிகளின் வழியாக, இந்த மானிடப் பிறவியின் அளப்பரிய சக்தியான பெண்களை அடுப்பங்கரையிலே அடைத்து அவர்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக ஆடவர்கள் இருந்தல் கூடாது என்றும் அறிவுரை பகர்கின்றார்.

பெண் விடுதலை, பெண் முன்னேற்றம் போன்றவை பெயரளவிலும் பேச்சளவிலும் இல்லாமல் அவர்களுக்குக் கட்டாயக் கல்வியை வழங்குவதின் மூலமாக நாம் எதிர்நோக்கும் பெண்கள் முன்னேற்றத்தை விரைவிலேயே காண முடியும் என்பதைத் தன்னுடைய கவிதை அடிகளால் பறைசாற்றுகின்றார். இதனை,

கல்வியைக் கட்டாயத்
தால்நல்கி யாவர்க்கும்
நல்லுடலை ஓம்ப
நனியுழைத்தால் - அல்லலுண்டோ''[11]

என்ற அடிகள் வழியாகவும் தெளிவுபடுத்துகின்றார்.

## கவிஞர் கண்ணதாசன் பார்வையில் பெண்கள் முன்னேற்றம்

கவிப்பேரரசர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பெறும் கண்ணதாசனார் தம்முடைய கவிதை அடிகளில் வாழ்வியல் தத்துவங்களையும், சமுதாயச் சீர்கேடுகளையும் உறவுகளின் செயல்பாடுகளையும் திரைப்படப் பாடல்களின் வழி விளக்கி மக்கள் மனத்தில் நீங்காத இடத்தைப் பெற்றவர். அவ்வாறு கண்ணதாசனார் பார்வையிலும் பெண்கள் முன்னேற்றம் குறித்த கவிதைகள் பரவிக் கிடக்கின்றன. இதனை,

''நதியென்ற உடல் கொண்டு
மதியென்ற இள மங்கை
நலமுண்ண ஆசை பெறுவேன்''[12]

என்ற மாதரைப் பாடு மனமே! என்ற கவிதை அடிகளின் வழி பெண்களுக்குண்டான நன்மைகளை அவர்கள் அடையச் செய்வதில் அவருக்குக் காணப்படும் ஆசையினை அறிய முடிகின்றது.

மனையறம் போற்றிப் பாரத நாட்டின் பண்பாட்டைப் பறைசாற்றுபவர்கள் பெண்களே என்று கூறும் விதத்தில் வாழிய மனையறம் என்ற கவிதை அடிகளின் வழியாக, ஆடவரின் வாழ்வும் அர்த்தமுள்ளதாக வேண்டுமெனில், அன்புடைய மனைவி கூடி இருத்தலால் மட்டுமே சாத்தியமாகும் எனவும், அவளன்றி ஓர் அணுவும் அசையாது எனவும் பெண்களின் மேன்மையைத் தம் பாட்டிலே கட்டிவைத்தார் கண்ணதாசனார். இதனை,

மங்கல மங்கையர் மனையறம் பற்றச்
செப்பிய இயங்கோர் செய்தியின் வழியும்
இருவர் ஒருவராய் இயங்கும் இயக்கம்
திருமண மென்னும் செவ்வறமாகும்![13]
எனவும்

மற்றவை கூடினும், மனையறம் இன்றேல்
பெண்ணின் பிறப்பே பேதமையாகும்!
ஆயிரம் கல்வி அறிவெனத் தேறினும்
ஆடவன் வாழ்வும் அன்புடை மனைவி
இல்லா தாயின் இல்லா தாகும்![14]

எனவும் தன் கவிதை அடிகளில் சுட்டுகின்றார்.

## பெண்கள் முன்னேற்றத்தில் எழுச்சிக்கவிஞர் புலமைப்பித்தனின் பங்களிப்பு :

கவிஞர்.புலமைப்பித்தன் அவர்கள் கோயமுத்தூரில் பிறந்தவர். 1964இல் இருந்து திரைப்படத்தில் பாடல் எழுதி வருகிறார். அவர் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். இவர் இன்றைய பெண்கள் சமூக சேவையில் அன்னை தெரேசாவாக இருப்பது தொடங்கி, கிரண்பேடி அவர்களைப்போல மாநில ஆளுநராய்த் திகழ்வது வரை பாரதி கண்ட புதுமைப் பெண்களாக உலக வரலாற்றில் தடம் பதித்து வருவதையும் இன்றைய பெண்களின் முன்னேற்றமானது எல்லைகளைக் கடந்து விரிந்து கொண்டு இருக்கின்றது என்பதையும் இவர்தம் கவிதை அடிகளின் வழி விளக்கியுள்ளதை உணர முடிகின்றது. இதனை,

அச்சம் என்றும் நாணம் என்றும்
அடக்கி வைத்தார் ஆண்கள் நம்மை
ஆளத் திட்டம் தீட்டி வைத்தார்கள்
தீமை தன்னை என்னும் போது அச்சம் கொள்ளுங்கள்!
பாவம் வந்து சேரும் போது வெட்கம் கொள்ளுங்கள்!
புதுப் பண்பாட்டைக் கேளடி இதைப்
பண்பாடிச் சொன்னான் பாரதி![15]

என்று தமிழ்க்கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் தன்னுடைய அடிகளில் மகாகவி பாரதியின் வழிநின்று புதுமைப்பெண்ணைப் போற்றியுள்ள- தைக் காண முடிகின்றது.

## புதுமைப்பெண்கள்

அடுப்பங்கரையிலே முடங்கிக்கிடந்த பெண்களையும், அடக்குமுறைகளினாலும் சமூகச் சீர்கேட்டினாலும் வீட்டுக்குள்ளே பூட்டப்பட்டிருந்த பெண்களையும் தம்முடைய எழுச்சிப்பாடல்கள் மற்றும் கவிதைகள் வழியாகத் தட்டியெழுப்பி அப்பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியையும் வியக்கத்தக்க மாற்றத்தையும் ஏற்படுத்திய பெருமை புரட்சிக்கவிஞர்களையே சாரும். பெண் சுதந்திரம், முன்னேற்றம் என்ற பெயர்களில் கலாச்சாரச் சீர்கேட்டை நாம் ஒரு நாளும் ஏற்கக் கூடாது. எதிர்வரும் சந்ததியினர் பெண்களைக் கண்ணியத்துடனும் மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும். தாம் மேற்கொள்ளும் செயல்கள் யாவிலும் புதுமையைப் புகுத்தி அதில் வெற்றியடையும் விலைமதிப்பற்ற ஞான ஊற்றுகள் பெண்கள். அரசாங்கத்தின் உதவியாலும், சமூக மேம்பாட்டினாலும் இன்றைய பெண்களின் நிலை பன்மடங்கு உயர்ந்துள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து, அதன் வளர்ச்சியையும் மேம்பாட்டினையும் இன்று நம் கண்முன்னே செயல்படுத்தி வெற்றியும் கண்டு வருகின்றார்கள் பெண்கள். இதனை,

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்
………. ………. ………. ……….
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்.[16]

என்ற அடிகளின் வழியாகத் தன்னெறிகளைத் தானே வகுத்திடுபவள் பெண் என்று பாரதி கூறுவதைக் காணமுடிகின்றது.

முயற்சி என்று வந்து விட்டால் ஆண் பெண் என்ற பேதம் இல்லாதவாறு அத்தனை கலைகளையும் முறையாகக் கற்பவள் பெண். தன்மானம் போற்றும் தாயவள். பெண்களை நிலவாக, மலராக, வருணிக்கும் தன்மையைக் கடந்து அவளை வீர மங்கையாக வழிபடும் காலம் வந்து விட்டது என்பதை,

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபலச் செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்பராம்.[17]

என்ற கவிதை அடிகள் பெண் முன்னேற்றத்தைப் போற்றுவதாக அமைந்துள்ளதை உணர முடிகின்றது.

## பல்துறை வளர்ச்சி

குடும்பம் முதல் பணிபுரியும் அலுவலகம் வரை அவளுடைய பரிணமிப்பு அளவற்றது. ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு பல்கலைக்கழகமாகவே திகழ்கின்- றாள். வீட்டில் தாயாக உணவு பரிமாறுவதில் இருந்து, சமுதாயத்தில் சேவை செய்யும் பெண்ணாகத் திகழ்வது வரை அவளுடைய பலமானது ஆண்களுக்கு நிகரானது. ஆண்களை விடவும் அதிகமானது. இதனை,

"எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம் - பண்ணிய
சக்தியே நம்மைச் சமைத்தது காண்,"[18]

என மஹாசக்தி வெண்பாவில் தேசியகவி தெளிவுபடுத்துகின்றார்.

## முடிவுரை

ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 8-ம் நாளை சர்வதேச மகளிர் தினமாக நாம் கொண்டாடி வருகிறோம். இந்த நாளில் பாலின சமத்துவம், சமூகநீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட உலகை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபடவேண்டும். இந்த தினம் தங்களது குடும்பம், சமுதாயம், சமூகம், நாடு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்காற்றியுள்ள சாதாரணப் பெண்களின் முனைப்பைப் போற்றுவதற்காகக் கொண்டாடப்படுகி -றது. ஆனால், இத்தகு திறன்வாய்ந்த பெண்களுடைய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் தமிழ்மொழிப்புலமை பெற்ற புரட்சிக்கவிஞர்கள் என்பதையும் பெண் முன்னேற்றமும், பெண் சுதந்திரமும் பெண் கல்வியும் நிச்சயமாக சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதையும் அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்பு

1. மகாகவி பாரதியார் கவிதைகள், சி.சுப்ரமணிய பாரதியார், பக்க.எண் 114
2. மேலது - பக்க.எண் 194
3. மேலது - பக்க.எண் 116
4. மேலது - பக்க.எண் 198
5. மேலது - பக்க.எண் 198

6. மேலது - பக்க.எண் 197
7. மேலது - பக்க.எண் 198
8. பாவேந்தர்பாரதிதாசன்-குடும்பவிளக்கு,முனைவர்.கமலா முருகன், பக்க.எண்-112
9. மேலது - பக்க.எண் 127
10. மேலது - பக்க.எண் 134
11. மேலது - பக்க.எண் 156
12. கண்ணதாசன்கவிதைகள் தொகுப்பு,முனைவர். வெங்கடேசன்,பக்க.எண்-24
13. மேலது - பக்க.எண் 88
14. மேலது - பக்க.எண் 89
15. புலமைப்பித்தன்கவிதைகள் - புலமைப்பித்தன்,பக்க.எண்-55
16. மகாகவி பாரதியார் கவிதைகள், சி.சுப்ரமணிய பாரதியார், பக்க.எண் 195
17. மேலது - பக்க.எண் 198
18. மேலது - பக்க.எண் 110

## துணை நூற்பட்டியல்


1. சி.சுப்ரமணியபாரதியார், பாரதியார் கவிதைகள், இந்துபதிப்பகம், சென்னை, 2009.
2. முனைவர்.கமலாமுருகன், பாவேந்தரின் குடும்ப விளக்கு,மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2006.
3. முனைவர்.வெங்கடேசன், கண்ணதாசன் கவிதைகள் தொகுப்பு, பாகம் 5 – கண்ணதாசன் பதிப்பகம், சென்னை,2005.
4. புலமைப்பித்தன்,புலமைப்பித்தன் கவிதைகள், தென்றல் பதிப்பகம்,தஞ்சை,2009.